JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 8 Witness for Prosecution

CC No. 82/2021 Crime No. Station

| | | |
|---|---|---|
| Name | Pw-8- கார்த்தி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of September 2025 | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.11.2019 ஆம் தேதியன்று அம்மாபேட்டை காவல் நிலைய தலைமை காவலர் செந்தில்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது பவானி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற அயம்மாள் என்பவரது அசால்ட் இன்டிமேசனை பெற அங்கு சென்று பார்த்தபோது அவர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு மருத்துவமனை சென்றிருப்பதாக தகவல் கிடைத்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த மேற்படி அய்யம்மாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.242/2019, சட்டப்பிரிவுகள் 143, 294(b), 323, 324, 506(ii) AND 379 IPC ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய உதவி ஆய்வாளர் சிவாஜி என்பவர் 18.11 .019 ஆம் தேதியன்று 17-15 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான கோபாலன் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் 17-45 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்து 96.5 செமீ நீளமும், 11 செமீ சுற்றளவும் கொண்ட கட்டை ஒன்றினையும், 12

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.09.23 07:11:36 +0530

செமீ நீளமும், 19.5 செமீ சுற்றளவும் கொண்ட கல் ஒன்றினையும், 40 செமீ நீளம் கொண்ட கருக்கருவாள் ஒன்றினையும், 65 செமீ நீளமும் 12 செமீ சுற்றளவும் கொண்ட மர கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்றினையும், தென்னை மட்டை ஒன்றினையும் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். பின்னர் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். படிவம் 91 அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் அய்யம்மாள், ஆனந்தன், சோலை கவுண்டர் மாதையன், துரையன், கோபாலன் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். அவரது புலன் விசாரணையிலிருந்து சம்பவயிடத்திற்கு வந்த வெங்கிடு, பூபதி மற்றும் மயிலி ஆகியவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்களை விலக்காட்ட முற்பட்டார்கள் என்றும் அவர்கள் யாரையும் திட்டவோ, தாக்கவோ இல்லை என்றும் தெரிய வந்ததாலும், வாதி அய்யம்மாளின் கழுத்தில் இருந்த 2 -1/4 பவுன் தங்க சங்கிலியை யாரும் திருடிக் கொண்டு செல்லவில்லை என்று தெரிய வந்ததாலும்,

மேலும் மேற்படி சம்பவத்தில் கலக்கத்தை விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சாட்சி அய்யம்மாள் மற்றும் சாட்சிகள் ஆனந்தன், சோலை கவுண்டர், மாதையன் ஆகியோர்களை, எதிரிகள் கெட்ட வார்த்தைகள் திட்டி கையாலும், காலாலும் மற்றும் அபாயகரமான ஆயுதங்களால் தாக்கினால் தாக்கப்பட்டவர்களுக்கு மரணம் விளைவிக்கப்படும் என்ற அறிந்தும் கட்டை மண்வெட்டி மற்றும் சில பொருட்களால் தாக்கியதால் சாட்சி ஆனந்தனுக்கு கொடுங்காயமும், சாட்சி அய்யம்மாள் சாட்சி மாதையன் மற்றும் சாட்சி சோலை கவுண்டர் ஆகியோர்களுக்கு சாதாரண காயங்களும் ஏற்பட்டதாலும், சாட்சி ஆனந்தனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதாலும், வழக்கின் சட்டப்பிரிவை பிரிவுகள் 143, 294(b), 323, 324, 506(ii) AND 379 IPC ஆகிய பிரிவுகளில் இருந்து சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 147, 148, 326, 149 IPC ஆகிய பிரிவுகளாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

எதிரிகள் ராஜா, அஜித், நந்தினி, அருள் ஜோதி, அர்ஜுனன் ஆகிய ஐவரும் மாண்பமை ஈரோடு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று விட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவர் அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 20.01.2020 ஆம் தேதியன்று எதிரிகள் ராஜா, அஜித், நந்தினி, அருள் ஜோதி, அர்ஜுனன் ஆகிய ஐவர் மீதும் சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 147, 148, 326, 149 IPC ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:11:44 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 3 நாட்கள் கால தாமதமாகத் தான் இந்த நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பமும் நடைபெறவில்லை என்றாலும், புகார் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. இந்த வழக்கிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போது குற்ற எண்.243/2019 CC 38/21 என்கிற வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் வழக்கை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:11:49 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 7 Witness for Prosecution

CC No. 82/2021 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-7- மருத்துவர்.சத்தியமூர்த்தி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of September 2025 | | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பவானி அரசு மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.11.2019 ஆம் தேதியன்று நான் மேற்படி மருத்துவமனையில் மருத்துவ அலுவலில் இருந்தபோது அன்றைய தினம் மாலை சுமார் 18- 40 மணியளவில் அந்தியூர், பி.கே.புதூர், கண்ணம்பள்ளி கிராமம், தொப்பம்பாளையத்தை சேர்ந்த ஆனந்தன் மனைவி அய்யம்மாள் என்பவரும் அய்யம்மாளின் கணவரான ஆனந்தன் மற்றும் மயிலம்பாடி கரடிப்பாளையம் பச்சை பள்ளியைச் சேர்ந்த பெரிய சோலை கவுண்டர் மகன் சோலை கவுண்டர் மற்றும் சோலை கவுண்டரின் மகன் மாதையன் ஆகியோர்கள் அன்றைய தினம் மாலை 17-00 மணிக்கு தங்களது தோட்டத்தில் இருந்தபோது தங்களுக்கு நன்கு தெரிந்த சிலர் தங்களை கையாலும், காலாலும் கட்டை மற்றும் கல் மண்வெட்டியால் அடித்ததில் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார்கள். அவர்களை பரிசோதித்தபோது அதில் மாதையன் என்பவருக்கு விபத்து பதிவேட்டு எண்.Sl.NO.1328768 பதிவு செய்யப்பட்டும், அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது.

1.வலது கால் முட்டியில் வீக்கம் மற்றும் வலி இருந்தது.

2. தலையில் 5x1 செமீ அளவில் சிராய்ப்புக் காயம் காணப்பட்டது.

3. இடது கைபெருவிரலில் 2x1 செமீ அளவில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.09.23 07:11:57 +0530

காயங்கள் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். மாதையனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சோலை கவுண்டர் என்பவருக்கு விபத்து பதிவேட்டு எண். SL.NO.1328769 பதிவு செய்யப்பட்டும், அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது.

1. முன் நெற்றியில் சிறிய சிராய்ப்புக் காயம் காணப்பட்டது.
2. 4x1 செமீ அளவில் தாடையில் சிராய்ப்புக் காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். சோலை கவுண்டரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அய்யம்மாள் என்பவருக்கு விபத்து பதிவேட்டு எண். SL.NO.1328770 பதிவு செய்யப்பட்டும், அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது.

1. வலது முழங்கையில் சிராய்ப்புக்காயமும், வீக்கமும் காணப்பட்டது.
2. உடல் முழுவதும் அவருக்கு தொட்டால் வலி ஏற்பட்டது

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அய்யம்மாளின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆனந்தன் என்பவருக்கு விபத்து பதிவேட்டு எண். SL.NO.1328771 பதிவு செய்யப்பட்டும், அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது.

1.இடது புறங்கை மற்றும் தோள்பட்டையில் வீக்கம் இருந்தது.

2. வலது முழங்கால் முட்டியில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

3. இடது மணிக்கட்டில் ஆள்காட்டி விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது

4. முன் நெற்றியில் சிராய்ப்புக்காயம் இருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1, 2, 4 ஆகிய காயங்கள் சாதாரண காயங்கள் எனவும் 3வது காயம் கொடுங்காயம் என்றும் சான்று வழங்கினேன். ஆனந்தனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேலே சொன்ன நான்கு நபர்களுக்கு ஏற்பட்ட காயமானது ஓடிச்சென்று கடினமான

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:12:03 +0530

பகுதியில் மோதி கீழே விழுந்தால் கூட ஏற்படக்கூடும் என்றால், சரிதான். ஆனந்தன் என்பவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு பெருவிரலின் கட்டை விரலில் எந்த எலும்பு முறிவும் நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். அவர் ஆள்காட்டி விரல் மட்டும் தான் என்னிடம் சொன்னார். சோலை கவுண்டர் என்பவருக்கு கழுத்தில் அறுத்தது போன்று எந்த காயமும் காணவில்லை என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.23 07:12:09 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.